©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 28.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 12] சென்னை, புதன்கிழமை, மார்ச் 23, 2022
பங்குனி 9, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண். 1/2022**

***கடலூர் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, கடலூர் மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(a) “கடலூர் மாநகரம்” அல்லது “மாநகரம்” என்பது கடலூர் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) “மாநகராட்சி” என்பது 3–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட கடலூர் மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) “மன்றம்” என்பது கடலூர் மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) “அரசு” என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) “நகராட்சி மன்றம்” என்பது கடலூர் நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) “நகராட்சி” என்பது கடலூர் நகராட்சி என்று பொருள்படும்;

(g) “பட்டியல் இனத்தவர்கள்” மற்றும் “பட்டியல் பழங்குடியினர்கள்” என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன்பின்பு, இதில் 1981 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981.

கடலூர் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, கடலூர் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது கடலூர் மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, கூறப்பட்ட மாநகரத்திற்கு கடலூர் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

***வரம்புரையாக,*** அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கடலூர் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2)—ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,—

(a) (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

***வரம்புரையாக,*** கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

7. (1) (2) மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் கடலூர் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல் நின்றுபோதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) கடலூர் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் கடலூர் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981 ஆம் ஆண்டுச் சட்டமானது மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2)—ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின்முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) கடலூர் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981ஆம் ஆண்டுச் சட்டத்தில்,—

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, கடலூர் மாநகருக்கும், கடலூர் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே கடலூர் மாநகராட்சி, கடலூரின் மாநகராட்சி மற்றும் கடலூர் பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல் கால வகை முறைகள்.

**9.** (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

***வரம்புரையாக,-***

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி கடலூர் நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, கடலூர் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.–

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.–

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1)–ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1)ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர், அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**11. (1)** அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**12.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

***வரம்புரையாக,*** இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கறவு மற்றும் காப்புரை

**13. (1)** 2021 ஆம் ஆண்டு கடலூர் மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2021.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண். 2/2022**

***காஞ்சிபுரம் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, காஞ்சிபுரம் மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) ''காஞ்சிபுரம் மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்பது காஞ்சிபுரம் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) ''மாநகராட்சி'' என்பது 3–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட காஞ்சிபுரம் மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) ''மன்றம்'' என்பது காஞ்சிபுரம் மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) ''நகராட்சி மன்றம்'' என்பது காஞ்சிபுரம் நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) ''நகராட்சி'' என்பது காஞ்சிபுரம் நகராட்சி என்று பொருள்படும்;

(g) ''பட்டியல் இனத்தவர்கள்'' மற்றும் ''பட்டியல் பழங்குடியினர்கள்'' என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன்பின்பு, இதில் 1981 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

காஞ்சிபுரம் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது காஞ்சிபுரம் மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, கூறப்பட்ட மாநகரத்திற்கு காஞ்சிபுரம் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

***வரம்புரையாக,*** அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காஞ்சிபுரம் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2) ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்குக் குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,—

(a) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்

தமிழ்நாடு சட்டம் V/1920.

7. (1) (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் காஞ்சிபுரம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல், நின்றுபோதல் வேண்டும்.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) காஞ்சிபுரம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் காஞ்சிபுரம் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக, வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981 ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981 ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) காஞ்சிபுரம் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில்,—

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, காஞ்சிபுரம் மாநகருக்கும், காஞ்சிபுரம் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே காஞ்சிபுரம் மாநகராட்சி, காஞ்சிபுரத்தின் மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல் கால வகைமுறைகள்.

9. (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

***வரம்புரையாக,-***

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி காஞ்சிபுரம் நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, காஞ்சிபுரம் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.—

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.—

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர் அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

11. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கறவு மற்றும் காப்புரை.

13. (1) 2021 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2021.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 3/2022**

***சிவகாசி மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, சிவகாசி மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) ''சிவகாசி மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்பது சிவகாசி நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) ''மாநகராட்சி'' என்பது 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சிவகாசி மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) ''மன்றம்'' என்பது சிவகாசி மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) ''நகராட்சி மன்றம்'' என்பது சிவகாசி நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) ''நகராட்சி'' என்பது சிவகாசி நகராட்சி என்று பொருள்படும்;

(g) ''பட்டியல் இனத்தவர்கள்'' மற்றும் ''பட்டியல் பழங்குடியினர்கள்'' என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன் பின்பு, இதில் 1981 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

சிவகாசி மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, சிவகாசி நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது சிவகாசி மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, கூறப்பட்ட மாநகரத்திற்கு சிவகாசி மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த சிவகாசி நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2) ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட காலஅளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,—

(a) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய காலஅளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

7. (1) (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, ''மாவட்ட நகராட்சிகள் சட்டம்'' எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் சிவகாசி மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல் நின்றுபோதல் வேண்டும்.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) சிவகாசி மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் சிவகாசி மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981 ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981 ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2)ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) சிவகாசி மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில்,–

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, சிவகாசி மாநகருக்கும், சிவகாசி நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே சிவகாசி மாநகராட்சி, சிவகாசியின் மாநகராட்சி மற்றும் சிவகாசி பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல் கால வகைமுறைகள்.

9. (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை, அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக,—

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி சிவகாசி நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, சிவகாசி நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.—

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.—

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர், அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

11. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2021.

நீக்கறவு மற்றும் காப்புரை.

13. (1) 2021 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 4/2022**

***கரூர் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, கரூர் மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,- பொருள் வரையறைகள்.

(a) "கரூர் மாநகரம்" அல்லது "மாநகரம்" என்பது கரூர் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) "மாநகராட்சி" என்பது 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட கரூர் மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) "மன்றம்" என்பது கரூர் மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) "அரசு" என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) "நகராட்சி மன்றம்" என்பது கரூர் நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) "நகராட்சி" என்பது கரூர் நகராட்சி என்று பொருள்படும்;

(g) "பட்டியல் இனத்தவர்கள்" மற்றும் "பட்டியல் பழங்குடியினர்கள்" என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981. (2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன்பின்பு, இதில் 1981 ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, கரூர் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது கரூர் மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து கூறப்பட்ட மாநகரத்திற்கு கரூர் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்: கரூர் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

வரம்புரையாக, அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கரூர் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2) ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,–

(a) (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

தமிழ்நாடு சட்டம் V/1920.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

7. (1) (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் கரூர் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல் நின்றுபோதல் வேண்டும்.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) கரூர் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் கரூர் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981 ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981 ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) கரூர் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில்,—

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, கரூர் மாநகருக்கும், கரூர் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே கரூர் மாநகராட்சி, கரூரின் மாநகராட்சி மற்றும் கரூர் பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல் கால வகை முறைகள்

**9.** (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை, அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக,–

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி கரூர் நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, கரூர் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.—

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.—

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர், அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

11. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கறவு மற்றும் காப்புரை. 13. (1) 2021 ஆம் ஆண்டு கரூர் மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2021.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 5/2022**

***தாம்பரம் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தாம்பரம் மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(a) ''தாம்பரம் மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்பது தாம்பரம் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) ''மாநகராட்சி'' என்பது 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) ''மன்றம்''என்பது தாம்பரம் மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) ''நகராட்சி மன்றம்'' என்பது தாம்பரம் நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) ''நகராட்சி'' என்பது தாம்பரம் நகராட்சி என்று பொருள்படும்;

(g) ''பட்டியல் இனத்தவர்கள்'' மற்றும் ''பட்டியல் பழங்குடியினர்கள்'' என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன் பின்பு, இதில் 1981ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தாம்பரம் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தாம்பரம் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது தாம்பரம் மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, கூறப்பட்ட மாநகரத்திற்கு தாம்பரம் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த தாம்பரம் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2) ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4)ஆம் மற்றும் (5)ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,—

(a) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய கால அளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

7. (1) (2) மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் தாம்பரம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல் நின்றுபோதல் வேண்டும்.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) தாம்பரம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் தாம்பரம் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகை முறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981 ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981 ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2)ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) தாம்பரம் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில்,—

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, தாம்பரம் மாநகருக்கும், தாம்பரம் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே தாம்பரம் மாநகராட்சி, தாம்பரத்தின் மாநகராட்சி மற்றும் தாம்பரம் பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மாறுதல் கால வகைமுறைகள்.

9. (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக,—

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி தாம்பரம் நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, தாம்பரம் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.—

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.—

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர், அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

11. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம். இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2021. 13. (1) 2021 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு மற்றும் காப்புரை.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 6/2022**

***கும்பகோணம் மாநகரத்திற்கென மாநகராட்சி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சிச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, கும்பகோணம் மாநகரம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(a) ''கும்பகோணம் மாநகரம்'' அல்லது ''மாநகரம்'' என்பது கும்பகோணம் நகராட்சியில் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பகுதி எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்துடன் சேர்க்கப்படுகிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்; ஆனால் இந்தச் சட்டத்தின் அத்தகைய தொடக்கத் தேதிக்குப் பின்னர் அம்மாநகரத்திலிருந்து விட்டுவிடப்பட்ட பகுதி எதனையும் உள்ளடக்காது;

(b) ''மாநகராட்சி'' என்பது 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட கும்பகோணம் மாநகராட்சி என்று பொருள்படும்;

(c) ''மன்றம்'' என்பது கும்பகோணம் மாநகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(d) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) ''நகராட்சி மன்றம்'' என்பது கும்பகோணம் நகராட்சி மன்றம் என்று பொருள்படும்;

(f) ''நகராட்சி'' என்பது கும்பகோணம் நகராட்சி என்று பொருள்படும்;

(g) ''பட்டியல் இனத்தவர்கள்'' மற்றும் ''பட்டியல் பழங்குடியினர்கள்'' என்பது அரசமைப்புச் சட்டத்தின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு முறையே, குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

(2) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால், (இதன் பின்பு, இதில் 1981ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அவற்றிற்கு முறையே அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

கும்பகோணம் மாநகரத்திற்கென மாநகராட்சியை அமைத்தல்.

3. (1) இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, கும்பகோணம் நகராட்சியில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடமானது கும்பகோணம் மாநகரமாக அமைதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து கூறப்பட்ட மாநகரத்திற்கு கும்பகோணம் மாநகராட்சி என்ற பெயரில் மாநகராட்சியொன்று அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசானது, அவ்வப்போது, மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பிடங்களை அதில் உள்ளடக்கும் வகையிலோ அல்லது அதிலிருந்து நீக்கிவிடும் வகையிலோ இந்த உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநகரத்தின் எல்லை வரம்புகளை மாற்றியமைக்கலாம்:

மேலும், வரம்புரையாக இந்த உட்பிரிவின்படியான அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது முன்னதான வெளியீட்டிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) இம்மாநகராட்சியானது, கூறப்பட்ட பெயரால், சொத்துக்களை ஈட்டும், வைத்திருக்கும் மற்றும் அதனை வகை செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலுக்கான அதிகாரத்துடனான தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதனுடைய கூட்டமைப்பின் பெயரில் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கும்பகோணம் நகராட்சியானது, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நகராட்சிய அதிகார அமைப்புகள்.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்குப் பின்வரும் நகராட்சிய அதிகார அமைப்புகள் பொறுப்புடையனவாக இருத்தல் வேண்டும்,—

(a) ஒரு மேயர்;

(b) ஒரு மன்றம்;

(c) ஒரு நிலைக்குழு;

(d) ஒரு சிற்றொகுதிகள் குழு; மற்றும்

(e) ஓர் ஆணையர்.

மன்றத்தை அமைத்து உருவாக்குதல்.

5. (1) (2) ஆம் உட்பிரிவில் பிறவாறாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, மன்றமானது, அரசினால் அவ்வப்போது அறிவிக்கையின் மூலமாக நிர்ணயிக்கப்படலாகும், இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், ஆயினும் மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது எந்த நேரத்திலும் எழுபத்து இரண்டிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

(2) மன்றத்தில் பின்வரும் நபர்களும் பிரதிநிதித்துவம் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியின் பரப்பிடத்திற்குள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ள மாநிலங்களவை உறுப்பினர்கள்;

(b) மாநகராட்சியின் பரப்பிடத்தை முழுமையாக அல்லது பகுதியாகக் கொண்டிருக்கும் தொகுதிகளின் பிரதிநிதியான தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் அனைத்து உறுப்பினர்கள்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமைத்தகுதி பெற்றிருத்தல் வேண்டும், ஆனால் மன்றக் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

(4) மன்றத்தில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை சேர்ந்த நபர்களுக்கு பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கையானது, அம்மாநகரத்தின் மொத்த மக்கள் தொகைக்கு எந்த வீதத்தில் அம்மாநகரத்திலுள்ள பட்டியல் இனத்தவர்களின் அல்லது அம்மாநகரத்திலுள்ள பட்டியல் பழங்குடியினர்களின் மக்கள் தொகையானது அமைந்திருக்கின்றதோ அதே வீதத்தில் கிட்டத்தட்ட இயலுமளவிற்கு மன்றத்தில் நேரடித் தேர்தலின் மூலம் நிரப்பப்பட வேண்டிய மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப அமைந்திருத்தல் வேண்டும்.

(5) பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களைச் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களிலிருந்து பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அது பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(6) மன்றத்தில் பெண்களுக்கென பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையானது, மன்றத்திலுள்ள பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில், பட்டியல் இனத்தவர்களையும் பட்டியல் பழங்குடியினர்களையும் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக, ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது.

(7) (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின்படி ஒதுக்கீடு செய்யப்படும் பதவியிடங்களானவை அரசமைப்புச் சட்டத்தின் 334 ஆம் உறுப்பில் குறிப்பிடப்பட்ட காலஅளவு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

மாநகராட்சியின் கால அளவு.

6. (1) மாநகராட்சி, குறித்த காலத்திற்கு முன்னரே கலைக்கப்பட்டாலன்றி வழக்கமான ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் அதனுடைய முதல் கூட்டத்திற்கென குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலஅளவு வரையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; ஆனால் அதற்கு மேலாக அன்று; மற்றும் மேற்சொன்ன ஐந்தாண்டுக் காலஅளவானது மாநகராட்சியைக் கலைப்பதாகச் செயற்படும்.

(2) மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்கான தேர்தல் ஒன்று,—

(a) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதனுடைய காலஅளவு முடிவடைவதற்கு முன்னதாக; அல்லது

(b) அது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவு முடிவதற்கு முன்னதாக நடத்தி முடிக்கப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, கலைக்கப்பட்ட மாநகராட்சி தொடர்ந்திருக்கக்கூடிய எஞ்சிய கால அளவானது ஆறு மாத காலத்திற்குக் குறைவாக இருந்திருக்குமிடத்து, அத்தகைய கால அளவிற்கென மாநகராட்சியை அமைத்துருவாக்குவதற்காக இந்த உட்பிரிவின்படி தேர்தல் எதனையும் நடத்துவது தேவையானதாக இருத்தல் கூடாது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பொருந்தாது எனல்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

7. (1) (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (இதன் பின்பு, “மாவட்ட நகராட்சிகள் சட்டம்” எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமானது, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும் கும்பகோணம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கும் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு பொருந்துதல் நின்றுபோதல் வேண்டும்.

(2) அவ்வாறு நின்றுபோதலானது.—

(a) கும்பகோணம் மாநகரத்திற்குள் அடங்கியிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் முந்தைய செயற்பாட்டினையும்;

(b) மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்து உள்ளான தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட மற்றும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் அனைத்து நியமனங்கள், அறிவிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள், பணிப்பாணைகள், உரிமங்கள், அனுமதிகள், திட்டங்கள், படிவங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியன எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நியமனங்களால், அறிவிக்கைகளால், அறிவிப்புகளால், விதிகளால், துணை விதிகளால், ஒழுங்குமுறை விதிகளால், ஆணைகளால், பணிப்பாணைகளால், உரிமங்களால், அனுமதிகளால், திட்டங்களால், படிவங்களால் மற்றும் அதிகாரங்களால் அவை மாற்றி அமைக்கப்படுவது வரையிலும் கும்பகோணம் மாநகரத்திற்குள் அடங்கியுள்ள உள்ளாட்சிப் பரப்பிடத்தில் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகள் மாநகராட்சிக்குப் பொருந்துதல்.

8. (1) இதில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, வரி அல்லது கட்டணம் விதிப்பது மற்றும் வசூலிப்பது தொடர்பான வகைமுறைகள் உள்ளடங்கலான, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அனைத்து வகைமுறைகளும் இதன்மூலம் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல் மற்றும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்; மற்றும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பகுதியாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போன்று, 1981ஆம் ஆண்டுச் சட்டமானது, மாநகராட்சியைப் பொறுத்த அளவில் படிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மாநகராட்சிக்கு, 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகளைப் பொருந்தச் செய்வதை எளிதாக்கும் நோக்கத்திற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1981 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் மற்றும் துணைவிதிகளில் தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததாக இருக்கக்கூடிய வகைமுறைகள் எவற்றையும் நீக்குதல், திருத்துதல் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் மூலமாக அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றங்களைச் செய்யலாம் மற்றும் அதன்பேரில் 1981 ஆம் ஆண்டுச் சட்டமும் அதன்படி செய்யப்பட்ட விதிகளும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு மாநகராட்சிக்குப் பொருந்துதல் வேண்டும்.

(3) 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் துணைவிதிகளை தழுவியமைவதற்காக வகைமுறை செய்யப்படாமல் (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற வகைமுறை போதுமானதாக இல்லாத நிலையில் இருந்த போதிலும், இந்த வகைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பு எதுவும், மாநகராட்சிக்கு அவற்றைப் பொருந்தச் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காக, இந்த வகைமுறைகளை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்பாக உள்ள பொருட்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதன் பொருள் பாதிக்காத வகையில் தேவைப்படக்கூடிய அல்லது தக்கதென இருக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளலாம்.

(4) கும்பகோணம் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டு மற்றும் பொருந்துமாறு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தில்,—

(a) கோயம்புத்தூர் மாநகருக்கும், கோயம்புத்தூர் நகராட்சிக்குமான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே, கும்பகோணம் மாநகருக்கும், கும்பகோணம் நகராட்சிக்குமான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூரின் மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் பெருநகராட்சி ஆகியவற்றுக்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக முறையே கும்பகோணம் மாநகராட்சி, கும்பகோணத்தின் மாநகராட்சி மற்றும் கும்பகோணம் பெருநகராட்சிக்கான சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

9. (1) நகராட்சி மன்றத்தின் அனைத்து சொத்துகளும், அல்லது மன்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எவ்வகையிலும் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்கள் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்றும் அது முதற்கொண்டும், நகராட்சி மன்றத்தினால் எந்த வகையிலும் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட எவ்வகையிலான அனைத்து உரிமைகளுடனும் மற்றும் நகராட்சி மன்றத்திற்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்து பொறுப்புடைமைகளும் மற்றும் இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும். மாறுதல் கால வகைமுறைகள்.

(2) அத்தகைய தொடக்கத் தேதியன்று உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகளை, வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்களை அல்லது செலவுகளுக்குக் கொடுபட வேண்டிய தொகையை அல்லது இழப்பீட்டை அல்லது பிறவாறு நகராட்சி மன்றத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை வசூலிக்கப்படலாம் மற்றும் மாநகராட்சிக்கு அவை சேர்ந்தடைந்தவையாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் கொடுபட வேண்டியவை போன்று வசூலிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பாக நகராட்சி மன்றத்தால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகளும், கட்டணங்களும், தீர்வைகளும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுவது, நீக்கப்படுவது அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுவது வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி நகராட்சி மன்றம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரெவராலும் அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்துச் செயல் நடவடிக்கைகளும், அத்தகைய செயல் நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருந்தாற் போன்று மாநகராட்சி, அதிகாரஅமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படலாம்.

(5) அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும் மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கையில் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு தகுதியுடைய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்பாக, நகராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலர் அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக,—

(a) மாநகராட்சியின் பணியில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தத்தக்க வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பாக அத்தகைய பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவற்றிற்கு, குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய தொடக்கத் தேதி வரையிலும் நகராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பிற பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, நகராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் ஏற்றுக்கொள்ளும்படியாகவோ அல்லது மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாறுதல் செய்யும்படியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆட்குறைப்புப் பலன்களின்பேரில் நகராட்சியின் பணியிலிருந்து நீக்கும் படியாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க விருப்பத் தெரிவு ஒன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி கும்பகோணம் நகராட்சியில், சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நடைமுறையில் உள்ள சிற்றொகுதி எதுவும் அது மாற்றியமைக்கப்படாத வரையிலும் மாநகராட்சியின் கோட்டமாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, கும்பகோணம் நகராட்சிக்காகத் தயாரிக்கப்பட்டு இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பட்டியலானது, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்படுவது வரையிலும், மாநகராட்சிக்குரிய வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் நகராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதி தொடர்பான வாக்காளர் பட்டியலின் பகுதியானது, மாநகராட்சியின் நேரிணையான கோட்டத்திற்கான வாக்காளர் பட்டியலாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனி அலுவலரை நியமித்தல்.

10. (1) அரசால், அறிவிக்கை வாயிலாக பின்வருவனவற்றின் அதிகாரங்களை செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.—

(a) மன்றம்,

(b) நிலைக்குழு,

(c) ஆணையர், மற்றும்

(d) சிற்றொகுதிகள் குழு.

(2) தனி அலுவலரானவர்.—

(a) தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் வரையிலும், மாநகராட்சியின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்;

(b) மாநகராட்சியினால் நியமிக்கப்படும் ஒரு நிலைக்குழு நியமனம் செய்யப்படும் வரையிலும், நிலைக்குழுவின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளை செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும்; மற்றும்

(c) அரசால், ஆணையர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் ஆணையரின் அதிகாரத்தை செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், செயல்பாடுகளை செய்து முடிக்கவும் வேண்டும் மற்றும் அரசானது அறிவுறுத்தினால், அத்தகைய அலுவலர் நகராட்சி நிதியத்திலிருந்து அவரது பணிகளுக்காக ஊதியம் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின்படி அரசால் புதிய தனி அலுவலர் நியமிக்கப்படும் வரையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பு வரையில், நகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டுக் கொண்டிருப்பவரே மாநகராட்சியின் தனி அலுவலராக கருதப்படுவார் மற்றும் அவர் (1) ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரால் செலுத்தப்பட்ட, நிறைவேற்றப்பட்ட மற்றும் செய்து முடிக்கப்பட்டதைப் போன்ற அதே அதிகாரங்களை செலுத்துதல், கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் செயல்களை செய்து முடிக்கவும் வேண்டும்.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தனி அலுவலரானவர், அவரது நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் அல்லது மாநகராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் இதில் எது முந்தையதோ, அது வரையில் பதவி வகித்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

11. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள்அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

12. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**13.** (1) 2021 ஆம் ஆண்டு கும்பகோணம் மாநகராட்சி அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2021.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும் கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண். 7/2022**

***1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகள் ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(1) “ஆவடி மாநகராட்சி” என்பது I ஆம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள காவல் நிலையங்களின் வரம்புகளை உள்ளடக்கிய உள்ளாட்சி பரப்பிடம் என்று பொருள்படும் ;

(2) “தாம்பரம் மாநகராட்சி” என்பது II ஆம் இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள காவல் நிலையங்களின் வரம்புகளை உள்ளடக்கிய உள்ளாட்சி பரப்பிடம் என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் III/1888.

(3) மாநகரக் காவல் சட்டம் என்பது 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் என்று பொருள்படும்;

(4) “இந்தச் சட்டத்தின் வெளியிடப்பட்ட தேதி” என்பது ***தமிழ்நாடு அரசிதழில்*** 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்புச் செய்தல்) சட்டம் வெளியிடப்பட்ட தேதி என்று பொருள்படும்;

(5) “அரசு” என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(6) “நடைமுறையிலுள்ள சட்டம்” என்பது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன் பகுதி எதிலுமோ நடைமுறையில் உள்ள இயற்றுச் சட்டம், சட்டம், ஒழுங்குமுறை விதி, ஆணை, துணை விதி, விதி, திட்டம் அல்லது அறிவிக்கை எதனையும், அல்லது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன்பகுதி எதிலுமோ சட்டத்தின் செயல்திறனைப் பெற்றிருக்கின்ற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்;

(7) “இணைப்புப் பட்டியல்” என்பது இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(8) “மாநிலம்” என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் III/1981—ன் நீட்டிப்பு.

3.(1) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதிக்கு முன்பு நடைமுறையில் இருந்தவாறான மாநகரக் காவல் சட்டமானது ஆவடி மாநகரத்திலும், தாம்பரம் மாநகரத்திலும் நீட்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(2) ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில்,—

(a) சென்னை மாநகரத்தைக் குறிப்பிடும் (3 ஆம் பிரிவில் உள்ள சுட்டுகை அல்லாத பிற) சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக ஆவடி மாநகரத்தைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ அல்லது தாம்பரம் மாநகரத்தைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) சென்னை காவல் துறை ஆணையரைக் குறிப்பிடும் சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக, ஆவடி காவல்துறை ஆணையரைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ அல்லது, நேர்விற்கேற்ப தாம்பரம் மாநகரக் காவல்துறை ஆணையரைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் மாவட்ட குற்றவியல் நடுவர்கள் மற்றும் நிருவாகத் துறை நடுவர்களின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களிலுள்ள காவல் துறை ஆணையருக்கும் மற்றும் குறித்த சில பிற காவல் அலுவலர்களுக்கும் அதிகார மளிப்பதற்கான அரசின் அதிகாரம்.

**4.** (1) மாநகரக் காவல் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு ஊறின்றி, அரசானது, அறிவிக்கை வாயிலாக மற்றும் அதில் குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும், வரம்புகளுக்கும் உட்பட்டு,– மையச் சட்டம் 2/1974.

(a) (இதன்பின்பு, இந்தப் பிரிவில் கூறப்பட்ட தொகுப்புச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் அல்லது மாநில சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ள பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகைமுறைகளின்படி நிருவாகத் துறை நடுவர் ஒருவரின் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும், கடமைகளையும் ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரம் தொடர்பாக செலுத்தவும், புரியவும் நேர்விற்கேற்ப ஆவடி காவல் துறை ஆணையருக்கோ அல்லது தாம்பரம் காவல்துறை ஆணையருக்கோ அதிகாரமளிக்கலாம்.

(b) கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் அல்லது மாநிலச் சட்டமன்றமானது மாநிலத்திற்காக சட்டமியற்று அதிகாரம் பெற்றிருக்கின்ற பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகைமுறைகளின்படி நிருவாகத்துறை நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும், கடமைகளையும் ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரம் தொடர்பாக செலுத்தவும் புரியவும் (காவல்துறை உதவி ஆணையரின் படிநிலைக்குக் குறையாத ஓர் அலுவலரான) நேர்விற்கேற்ப ஆவடி மாநகரத்தில் அல்லது தாம்பரம் மாநகரத்தில் உள்ள காவல்துறை ஆணையருக்கு கீழ் உள்ள அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி அவர் அதிகாரங்களைச் செலுத்தவோ அல்லது கடமைகளைப் புரியவோ அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருகையில் மற்றும் கடமைகளில் எதனையும் புரிந்து வருகையில் கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள நிருவாகத்துறை நடுவரொருவர், அந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராக இருப்பதைப்போன்று அதே அளவிற்கு, நேர்விற்கேற்ப, ஆவடி மாநகரத்தில் அல்லது தாம்பரம் மாநகரத்தில் உள்ள காவல்துறை ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் முறையே அந்தந்தக் காவல்துறை ஆணையரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ஆவடி மாநகரத்தின் காவல்துறை ஆணையர் அல்லது தாம்பரம் மாநகரத்தின் காவல்துறை ஆணையர் அல்லது அத்தகைய ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் எவரும், (1) ஆம் உட்பிரிவின்படி அவர் செலுத்துவதற்கு அல்லது புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் எவற்றையும் செலுத்துகையிலும், புரிகையிலும் கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உள்ளாகுதல் கூடாது.

5. (1) ஆவடி மாநகரத்திலும், தாம்பரம் மாநகரத்திலும், (இதன் பின்பு இந்தப்பிரிவில் இருந்துவந்த காவற்படை, எனக் குறிப்பிடப்படுவதான) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு செயல்பட்டு வந்த காவற்படையானது நீட்டிக்கப்பட்டதான மாநகரக் காவல் சட்டத்தின்படி இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளில், நேர்விற்கேற்ப ஆவடி மாநகரத்திற்காக அல்லது தாம்பரம் மாநகரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள காவற்படையாகக் கொள்ளப்படும். இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு பதவியில் இருந்து வந்த காவற்படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், நேர்விற்கேற்ப ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரத்திற்கான காவற்படையின் உறுப்பினராக அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியில் நியமிக்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆவடி, மற்றும் தாம்பரம் ஆகிய மாநகரங்களில் இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னர் செயல்பட்டு வந்த காவற் படையானது நீட்டிக்கப்பட்ட மாநகரக் காவல் சட்டத்தின்படி அமைக்கப் பட்டுள்ள காவற் படையாகவே கொள்ளப்படும்.

(2) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு இருந்து வந்த காவற்படையின் காவல் அலுவலர் எவரின் முன்பாக முடிவுறாதிருந்த (புலனாய்வுகள் வாயிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலான) நடவடிக்கைகள் அனைத்தும் இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு (1) ஆம் உட்பிரிவின்படி அவர் நியமனம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற அந்த பதவியை வகிப்பவர் என்ற தகுதியில், அவர் முன்பு நடப்பிலுள்ள நடவடிக்கைகளாகக் கொள்ளப்பட்டு அவ்வாறே அவை மேற்கொண்டு நடத்தப்படுதலும் வேண்டும்.

(3) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரால் அல்லது நிருவாகத்துறை நடுவர் ஒருவரால் சட்டம் எதன்படியும் செலுத்தப்படக்கூடியதான, ஆற்றப்படக்கூடியதான அதிகாரம் அல்லது பணி எதுவும் ஆவடி காவல் துறை ஆணையர் அல்லது தாம்பரம் காவல் துறை ஆணையர் அல்லது நீட்டிக்கப்பட்ட மாநகரக் காவல் சட்டத்தினால் அல்லது அதன்படியான அமர்த்தப்பட்ட காவல்துறையின் பிற அலுவலர் எவருக்கும் அளிக்கப்பட்டிருக்குமிடத்து அவ்வாறு அளிக்கப்படுவதற்கு முன்பு, நேர்விற்கேற்ப மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது, நிருவாகத் துறை நடுவரின் முன்னர் நிலுவையிலிருந்த அத்தகைய அதிகாரத்தை செலுத்துவது அல்லது அத்தகைய பணியை ஆற்றுவது தொடர்பான அல்லது அதிலிருந்து எழுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும், ஆவடி காவல்துறை ஆணையரின் அல்லது தாம்பரம் காவல் துறை ஆணையரின் அல்லது பிற அலுவலருக்கு அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது அளிக்கப்பட்டதன் பேரில், நேர்விற்கேற்ப ஆவடி காவல்துறை ஆணையர் அல்லது தாம்பரம் காவல் துறை ஆணையர் அல்லது காவல்துறையின் பிற அலுவலருக்கு மாற்றப்பட்டதாயிருக்கும்; மற்றும் அவ்வாறு நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ள அந்த அலுவலர் அவற்றைப் புதிதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள அத்தகைய நிலையிலிருந்தோ மேற்கொள்ளுதல் வேண்டும்.

6. (1) ஆவடி காவல்துறை ஆணையரும், தாம்பரம் காவல்துறை ஆணையரும் அந்நகரங்களுக்கு செயற்பாடு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் கீழ் தங்கள் பணிகளை செய்து வருகையில், (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்படக்கூடிய விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு தமிழ்நாடு மாநிலத்திற்கான காவல்துறை தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழும் செயலாட்சியின் கீழும் இருந்து வருவார்கள்.

ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய மாநகர ஆணையர்களின் மீது காவல் துறை இயக்குநரின் கட்டுப்பாடு.

(2) ஆவடி காவல்துறை ஆணையர் மற்றும் தாம்பரம் காவல்துறை ஆணையர் ஆகியோர் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவினால் காவல்துறை தலைமை இயக்குநருக்கு அளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் செயலாட்சி அதிகாரங்களை செலுத்தி வருவதை வரையறுப்பதற்கும் முறைப்படுத்துவதற்குமான விதிகளை செய்வதற்கு அரசானது தகுதி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவர் அல்லது நிருவாகத் துறை நடுவரொருவர் சட்டம் எதன்படியும் நேர்விற்கேற்ப, ஆவடி காவல்துறை ஆணையரால் அல்லது தாம்பரம் காவல்துறை ஆணையரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் அல்லது ஆற்றப்படக்கூடிய பணிகள் தொடர்பாக இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பொருந்துதலாகாது.

ஆவடி மற்றும் தாம்பரம் ஆகிய மாநகரங்களில் நடைமுறையில் இல்லாத சட்டங்களைக் குறிப்பிடும் சுட்டுகைகளுக்கு பொருள் கொள்ளுதல்.

7. (1) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளன்று, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்களில் நடைமுறையில் இல்லாத சட்டம் ஒன்று குறித்து, இந்தச் சட்டத்தினால் அந்நகரங்கள் தொடர்பாக நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்திலுள்ள சுட்டுகை எதுவும் மேற்சொன்ன மாநகரங்களின் நடைமுறையிலுள்ள நேரிணையான வேறு சட்டம் ஏதேனும் இருப்பின் அதனை சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும், 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டத்தை குறிப்பிடும் சுட்டுகை எதுவும் அந்த மாநகரங்கள் தொடர்பாக இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளன்று அல்லது அதன்பின்பு மாநகரக் காவல் சட்டத்தை குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். மையச் சட்டம் XXIV/1859.

நேரிணையான சட்டத்தை நீக்கறவு செய்தல்.

8. இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு (இதன் பின்பு இந்தப் பிரிவில் மையச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம், மையச்சட்டத்திற்கான இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மற்றும் மையச் சட்டத்தின் 54 – A ஆம் பிரிவின்படியான அறிவிக்கையின் மூலமாக நீட்டிக்கப்பட்டதுமான மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகள் உள்ளடங்கலாக மாநகரக் காவல் சட்டத்திற்கு நேரிணையான சட்டம் எதுவும் ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்களில் இருக்குமானால், மாநிலத்திற்கான சட்டங்களைச் செய்வதற்கான அதிகாரத்தை மாநிலச் சட்டமன்றம் பெற்றுள்ள, அந்த விஷயங்கள் தொடர்பாக அந்த நேரிணையான சட்டம் இருக்கின்ற அளவுக்கு, நேர்விற்கேற்ப, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்கள் தொடர்பாக அத்தகைய நேரிணையான சட்டமானது இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளில் நீக்கப்படும். மையச் சட்டம் XXIV/1859.

காப்புரைகள்.

9. (1) நேரிணையான சட்டம் எதையும் 8 ஆம் பிரிவினால் நீக்கம் செய்வதானது; –

(a) அத்தகைய சட்டம் ஏதொன்றின் முந்திய செயற்பாட்டையோ அல்லது அதன்படிச் செய்யப்பட்ட அல்லது உரியவாறு உட்படுத்தப்பட்ட செயல் எதனையும்; அல்லது

(b) அத்தகைய சட்டம் எதன்படியும் ஈட்டப்பட்டுள்ள, சேர்ந்துள்ள அல்லது அதற்கு உள்ளான உரிமை, சிறப்புரிமை கடமைப் பொறுப்பு அல்லது கடப்பாடு எதையும்; அல்லது

(c) அத்தகைய சட்டம் எதற்கும் எதிராக புரியப்பட்ட குற்றம் ஏதொன்றையும் பொறுத்து அடைந்த தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதையும்; அல்லது

(d) மேற்சொல்லப்பட்டபடியான அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடமைப் பொறுப்பு, கடப்பாடு, தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை ஏதொன்றினையும் பொறுத்த புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதையும் பாதித்தல் ஆகாது;

மற்றும் மாநகரக் காவல் சட்டத்தின் செயற்பாடு நீட்டிக்கப்பட்டிராதது போன்றே அத்தகைய புலனாய்வு சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி தொடரப்படலாம், தொடுக்கப்படலாம், செயற்படுத்தப்படலாம் என்பதோடு அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை விதிக்கப்படலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்கள் தொடர்பாக அத்தகைய நேரிணையான சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நியமனம் அல்லது ஒப்படைவு, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை, ஆணை, அறிவுறுத்தம் அல்லது பணிப்பாணை, உருவாக்கப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி, படிவம், துணை விதி அல்லது செயல் திட்டம் அல்லது வழங்கப்பட்ட சான்றிதழ், அனுமதி அல்லது உரிமம் அல்லது செய்துகொள்ளப்பட்ட பதிவு எதுவும் உள்ளடங்கலாக செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், மாநகரக் காவல் சட்டத்தின் நேரிணையான வகைமுறைகளின் கீழ் செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; நீட்டிக்கப்பட்டதான மேற்சொன்ன மாநகரக் காவல் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றமைத்தாலன்றி மற்றும் அதுவரையிலும் அதன்படியே தொடர்ந்து நடைமுறையில் இருந்துவருதலும் வேண்டும்.

10. நேர்விற்கேற்ப, ஆவடி, அல்லது தாம்பரம் மாநகரங்களில் அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருவதற்கு அல்லது பணிகள் எவற்றையும் ஆற்றிவருவதற்கு, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முந்திய தேதியன்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்று நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் வடிவம் அல்லது சொற்கள் மூலமாகவுமோ குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும், நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின்படியாகவோ அல்லது இந்தச் சட்டத்தின்படி மேற்சொன்ன மாநகரங்களுக்கு நேரிணையான புதிய அதிகார அமைப்பொன்று அமைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அது அந்தப் புதிய அதிகார அமைப்பைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாக இருந்தாற்போன்று செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

புதிய அதிகார அமைப்புகள் அமைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து அதிகார அமைப்புகளை குறிப்பிடும் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்.

11. ஆவடி மாநகரத்தில், தாம்பரம் மாநகரத்தில் நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தை பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக, நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் அந்த நீதிமன்றத்தின் அல்லது அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு எதற்கும் ஏற்றபடி அதன் சாராம்சத்தை பாதிக்காமல் மேற்சொன்ன சட்டத்தை பொருந்தச் செய்வதற்கு முறையானதாகவோ இருக்கக்கூடிய மாறுதல்களுடன் தேவையானதாகவோ அதற்குப் பொருள் கொள்ளலாம்.

மாநகரக் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக நீதி மன்றங்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளின் அதிகாரங்கள்.

12. இந்தச் சட்டத்தினால் ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீடிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு சமயத்திற்கேற்றார் போல் ஆணையின் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்திற்காக தேவையென அதற்குத் தோன்றக் கூடிய எதனையும் செய்யலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

13. அரசானது, அறிவிக்கை வாயிலாக காவல் நிலையம் எதனையும் சேர்ப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ இணைப்புப் பட்டியல்களை திருத்தம் செய்யலாம்.

இணைப்புப் பட்டியல்களை திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.

14. (1) அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனை அடுத்து வரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவை அந்த விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாறுதல் எதையும் செய்வதற்கு உடன்படுமானால், அல்லது அந்த விதி அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதலோ அந்த அறிவிக்கை வெளியிடப்படுதலோ ஆகாது என்று உடன்படுமானால், அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது, நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும், அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின் கீழ் முன்னமே செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகமின்றி இருத்தல் வேண்டும்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

15. (1) 2021 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2022.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

## இணைப்புப் பட்டியல் – I

## ஆவடி மாநகரம்

**[2 (1) ஆம் பிரிவைக் காண்க]**

| *வ. எண்.* | *காவல் நிலையங்கள்.* |
|---|---|
| 1. | அம்பத்தூர் |
| 2. | அம்பத்தூர் தொழிற்பேட்டை |
| 3. | ஆவடி |
| 4. | எண்ணூர் |
| 5. | காட்டூர் |
| 6. | கொரட்டூர் |
| 7. | மணலி |
| 8. | மணலி புதுநகர் |
| 9. | மாங்காடு |
| 10. | மீஞ்சூர் |
| 11. | மாதாவரம் பால்பண்ணை |
| 12. | முத்தாபுதுப்பேட்டை |
| 13. | நசரத்பேட்டை |
| 14. | பட்டாபிராம் |
| 15. | பூந்தமல்லி |
| 16. | செங்குன்றம் |
| 17. | சாத்தாங்காடு |
| 18. | செவ்வாப்பேட்டை |
| 19. | சோழவரம் |
| 20. | எஸ்.ஆர்.எம்.சி |
| 21. | டேங்க் பேக்டரி |
| 22. | திருமுல்லைவாயில் |
| 23. | திருநின்றவூர் |
| 24. | திருவேற்காடு |
| 25. | வெள்ளவேடு |

## இணைப்புப் பட்டியல் – II

## தாம்பரம் மாநகரம்

[2 (2) ஆம் பிரிவைக் காண்க]

| *வ. எண்.* | *காவல் நிலையங்கள்.* |
|---|---|
| 1. | குரோம்பேட்டை |
| 2. | சிட்லபாக்கம் |
| 3. | கூடுவாஞ்சேரி |
| 4. | கண்ணகி நகர் |
| 5. | கானாத்தூர் |
| 6. | கேளம்பாக்கம் |
| 7. | குன்றத்தூர் |
| 8. | மறைமலைநகர் |
| 9. | மணிமங்கலம் |
| 10. | ஓட்டேரி |
| 11. | பல்லாவரம் |
| 12. | பள்ளிக்கரணை |
| 13. | பீர்க்கன்கரணை |
| 14. | பெரும்பாக்கம் |
| 15. | சேலையூர் |
| 16. | செம்மஞ்சேரி |
| 17. | சங்கர் நகர் |
| 18. | சோமங்கலம் |
| 19. | தாம்பரம் |
| 20. | தாழம்பூர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண். 8/2022**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி I.**

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

414–B ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**2.** 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 414–B ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி III.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

375–B ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**3.** 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 375–B ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

510–AAA ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**4.** 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், பிரிவு 510–AAA ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி V.**

**1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

511–AAA ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**5.** 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 511–AAA ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி VI.

**1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

6. 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின், 10–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1994.

பகுதி VII.

**1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

7. 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின், 10–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/1994.

பகுதி VIII.

**1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

8. 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 29/1994.

பகுதி IX.

**2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

9. 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

பகுதி X.

**2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

10. 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2008.

பகுதி XI.

**2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9-A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

11. 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், ‘‘2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை’’ என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 26/2008.

## பகுதி XII.

## 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/2008.

12. 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XIII.

## 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 24/2013.

13. 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XIV.

## 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 25/2013.

14. 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XV.

## 2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 10/2019.

15. 2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XVI.

## 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் 11/2019.

16. 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XVII.

தமிழ்நாடு சட்டம் 24/2019.

## 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

17. 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2021.

18. (1) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்பட்டது.

நீக்கறவு மற்றும் காப்புரை.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.
தமிழ்நாடு சட்டம் 27/1994.
தமிழ்நாடு சட்டம் 28/1994.
தமிழ்நாடு சட்டம் 29/1994.
தமிழ்நாடு சட்டம் 7/2008.
தமிழ்நாடு சட்டம் 8/2008.
தமிழ்நாடு சட்டம் 26/2008.
தமிழ்நாடு சட்டம் 27/2008.
தமிழ்நாடு சட்டம் 24/2013.
தமிழ்நாடு சட்டம் 25/2013.
தமிழ்நாடு சட்டம் 10/2019.
தமிழ்நாடு சட்டம் 11/2019.
தமிழ்நாடு சட்டம் 24/2019.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும், 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டம், 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம், 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம், 2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சிச் சட்டம், 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் மற்றும் அவற்றின் அவசரச் சட்டங்களினால் ஏற்பட்ட திருத்தங்கள் யாவும் இந்த அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 9/2022**

***1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** இதன் பின்பு இதில் முதன்மை சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில் “பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்” எனும் சொற்றொடருக்காக, “பதினொரு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2021.

**3.** (1) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

நீக்கறவு மற்றும் காப்புரை.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும் கூறப்பட்ட அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டத்தின்படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 28ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 11/2022**

***2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/2012

28 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின், 28 ஆம் பிரிவில், "வகை – I – பதவி வழி உறுப்பினர்கள்" எனும் தலைப்பின் கீழ், (e) ஆம் கூறுக்கு பின், பின்வரும் கூறானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(f) இயக்குநர், தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பயிற்சிக் கழகம், சென்னை. ".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண். 12/2022**

***1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

50 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டத்தின் 50 ஆம் பிரிவில்,–

(1) "ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு" எனும் சொற்றொடருக்காக, "எட்டு ஆண்டுகள் காலத்திற்கு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) முதல் வகைமுறையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 13/2022**

***1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டம் என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. 2. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், பின்வரும் வரம்புரை, (i) ஆம் கூறில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 34ஆம் பிரிவின் திருத்தம்.

"வரம்புரையாக, இந்தக் கூறில் அடங்கியுள்ள எதுவும், கண்பார்வை குன்றியிருக்கிற அல்லது உடல் ஊனத்தின் பொருட்டு எழுத முடியாமலிருக்கிற நபர் எவருக்கும் பொருந்துதல் ஆகாது.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2022 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 14/2022**

***அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், மாநில கழகங்கள், சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் அதிகார அமைப்புகளில் குறித்த சில பதவிகளைப் பொறுத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் ஆணையத்திற்கு கூடுதல் செயற்பணிகளை ஒப்படைப்பு செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தின், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) ''ஆணையம்'' என்பது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்று பொருள்படும்;

(b) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(c) ''அமைப்பு'' என்பது அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனம், அரசுக் கழகங்கள் அல்லது சட்டப்பூர்வ வாரியம் அல்லது அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(d) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(e) ''காத்திருப்புப் பட்டியல்'' என்பது தேர்வு பட்டியலில் பொதுப் பிரிவினர் உள்ளடங்கலாக ஒவ்வொரு இடஒதுக்கீட்டுப் பிரிவின் விண்ணப்பதாரர்களின் இருபத்தைந்து விழுக்காட்டிற்கும் குறையாத விண்ணப்பதாரர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு பட்டியல் என்று பொருள்படும்;

(f) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

ஆள்சேர்ப்புக்கான கோரிக்கை.

**3.** தற்போது நடைமுறையிலுள்ள மாநிலச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்தவொரு அமைப்பும், அந்த அமைப்பில் பணியமர்த்துவதற்காக, விண்ணபத்தாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஆணையத்தைக் கோரலாம்:

தமிழ்நாடு சட்டம் 14/2016.

வரம்புரையாக, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் ஓட்டுநர் பதவி மற்றும் D—பிரிவாக வகைப்படுத்தப்பட்ட பதவிகள் தொடர்பாக அத்தகைய கோரிக்கையானது இருத்தல் கூடாது.

தமிழ்நாடு சட்டம் 14/2016.

ஆணையத்தின் மூலம் ஆள் சேர்ப்பு.

**4.** (1) ஆணையமானது, அவ்வப்போது 3 ஆம் பிரிவின் கீழ் பெறப்பட்ட கோரிக்கைகளை ஒருங்கிணைத்து ஓர் ஆண்டிற்கு இரண்டு முறை ஆட்சேர்ப்புகளை நடத்தி, விண்ணபத்தாரர்களை தேர்ந்தெடுத்து, மற்றும் 2016 ஆம் ஆண்டு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 27ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணி அமர்த்தியதற்கான இடஒதுக்கீட்டு கொள்கையை பின்பற்றி ஒவ்வொரு பதவிக்கான காத்திருப்புப் பட்டியல் ஒன்றினையும் தேர்வுப் பட்டியல் ஒன்றினையும் தயார் செய்து தொடர்புடைய அமைப்புகளுக்கு தேர்வு பட்டியலை மேலனுப்புதல் வேண்டும்:

வரம்புரையாக, ஆணையமானது அமைப்பு எவற்றிலுமிருந்து சிறப்பு சூழ்நிலைகளின்படியான கோரிக்கையின் பேரில் எந்த நேரத்திலும் ஆட்சேர்ப்பு நடத்தலாம்.

(2) காத்திருப்புப் பட்டியலானது, தேர்வுப் பட்டியலினை மேலே அனுப்பிய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் அல்லது அதைத்தொடர்ந்து தேர்வுப் பட்டியல் வரையப்படும் வரை, இவற்றில் எது முந்தையதோ, அதுவரையில் நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் களுக்கான பணியமர்த்தம்.

5. (1) தேர்வுப் பட்டியலினை பெற்றுக்கொண்டதன் பேரில், அமைப்பானது தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பணியமர்த்த ஆணைகளை வழங்குதல் வேண்டும்.

(2) தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதார் எவரேனும் பணியமர்த்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள், அமைப்பில் பணியில் சேர தவறினால், அவர் பணி அமர்த்தியதற்கான உரிமையை இழத்தல் வேண்டும்.

வரம்புரையாக, அமைப்பானது, சிறப்பான சூழ்நிலைகளில், பணியில் சேர்வதற்கு மூன்று மாதங்களுக்கு மிகாத மேலுமொரு கால அவகாசத்தை வழங்கலாம்.

(3) கூறப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பதாரர் பணியில் சேர தவறுவதன் பேரில் அமைப்பானது, பணியமர்த்தத்திற்காக காத்திருப்புப் பட்டியலிலிருந்து ஒரு விண்ணப்பதாரரை அனுப்புவதற்கு ஆணையத்திடம் கோரலாம்.

இடர்ப்பாடுகைள நீக்குவதற்கான அதிகாரம்.

6. இந்தச் சட்டத்தின் வகை முறைகளை செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, *தமிழ்நாடு அரசிதழில்* ஆணை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்

வரம்பரையாக அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்த இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலஅளவு ஒன்று முடிவடைந்ததற்கு பின்னர் செய்யப்படுதல் கூடாது.

7. (1) அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(a). இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளான்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b). இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3). இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்பு இப்பேரவை அத்தகைய விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை அந்த விதி, அல்லது ஆணை செய்யப்படுத்துதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்கு பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லும் தன்மைக்கும் குந்தகம் இன்றி இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:-**

**சட்ட எண் 36/2021**

*2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டத்தை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டம்.*

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு,

தமிழ்நாடு சட்டம் 37/2019

தமிழ்நாடு சட்டம் 37/2019–இன் நீக்கறவு

**2.** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசுச் செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.